The water is stagnated. There is no flow of water. Even there is a scheme to flow the Sea water. I do not know why that has not been done. The story of Cooum Buckgingham Canal is in existence for over 2 decades. I do not know why it has not been set right. The Government should see that these two canals are made permanent waterways so that small jetties are accommodated in these two canalls for transporting things. Not only that. The thatches also can be trasported through Cooum and Bucginham Canals. I want that all these schemes should be implemented in the most expeditious manner and also in a very firm manner. With these words, I conclude Thank you, Sri.

(8) அரசினர் தீர்மானம்.

விதி 31-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

" ஒவ்வொரு நாள் கூட்டத்தின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள் கேட்டு விடையளிப்பதற்கென்று ஒதுக்கப்பெற வேண்டும் என்றுள்ள தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 31-ஐ நாளை, 9—2—1982 அன்று தளர்த்தி ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீதான விவாதத்தை எடுத்துக்கொள்ள வேண்டும் ."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

(7) ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம் விவாதம்— (தொடர்ச்சி).

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு தலைவரவர்களே, ஆளுநர் உரையின்மீது கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களைக் கூறுவதற்கு நான் விரும்புகிறேன்.

இந்த ஆளுநர் உரையில் கூறப்பட்டிருக்கிற விவரங்களுக்குள் செல்வதற்கு முன்னால் முதலிலே ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன், இந்தச் சட்ட மன்றம் அமைக்கப்பட்ட பிறகு அதாவது